# QB365 Question Bank Software Study Material

## வரலாறு - இரண்டாம் உலகப்போருக்குப் பிந்தைய உலகம் முக்கியமான 2 & 5 மதிப்பெண் வினாக்கள் விடைகளுடன்(புத்தக & ஆக்கபூர்வமான வினாக்கள்)

## 10ம் வகுப்பு

## சமூக அறிவியல்

மொத்த மதிப்பெண் : 50

**2 மதிப்பெண் வினாக்கள்**

15 x 2 = 30

1) சீனாவில் 1911ஆம் ஆண்டில் நடந்த புரட்சிக்கு ஏதேனும் மூன்று காரணிகளைக் குறிப்பிடுக.

**பதில் :** 1. மஞ்சு வம்சத்தின் சிதைவு பேரரசின் பாதுகாவலராயிருந்த பேரரசியார் தாவேகரின் மரணத்தோடு துவங்கியது.
2. புதிய பேரரசர் இரண்டு வயதே நிரம்பியவர் என்ற நிலையில் மாகாண ஆளுநர்கள் சுதந்திரமாகச் செயல்பட்டனர்.
3. உள்ளூர் இராணுவக் கிளர்ச்சி 1911 ஆம் ஆண்டு ஏற்பட்டு அதன் பாதிப்பு பல மடங்குகளில் பரவியது.
4. மாகாண ஆளுநர்கள் மஞ்சு அரசின் பிரதிநிதித்துவங்களை உதறித் தங்கள் சுதந்திரத்தைப் பிரகடனப்படுத்தினர்.

2) மாவோவின் நீண்ட பயணம் பற்றிக் குறிப்பு வரைக.

**பதில் :** 1. ஷியாங் கே ஷேக் பொதுவுடைமைவாதிகளைச் சுற்றி முற்றுகையிடும் விதமாக ஆங்காங்கே பல நிலைகளை அமைத்திருந்தார்.
2. மாவோவும் ஹுனான் பகுதியை விட்டு அகன்று பாதுகாப்பான ஒரு பகுதிக்குச் செல்ல நினைத்தார்.
3. கிட்டத்தட்ட 1933 ஆம் ஆண்டு வாக்கில் சீன பொதுவுடைமை கட்சியின்மீது முழுக் கட்டுப்பாடும் மாவோ வசம் வந்து சேர்ந்தது.
4. ஒரு நீண்ட பயணத்தை முன்னெடுத்து 1,00,000 பொதுவுடைமை இராணுவத்தினர் 1934ல் கிளம்பினர்.
5. அப்பயணம் ஒரு சகாப்தமாக மாறியது.
6. இவர்களில் 20,000 பேர் மட்டும் 1935 இன் பிற்பகுதியில் 6000 மைல்களைக் கடந்து ஷேனிப் பகுதியை சென்றடைந்தனர்.
7. 1937 ஆம் ஆண்டில் ஏறக்குறைய ஒரு கோடி மக்களின் தலைவராகமாவோ அங்கீகரிக்கப்பட்டார்.

3) பாக்தாத் உடன்படிக்கை பற்றி அறிந்ததை எழுதுக

**பதில் :** 1. துருக்கி, ஈராக், பிரிட்டன், பாகிஸ்தான், ஈரான் ஆகிய நாடுகள் 1955 இல் ஏற்படுத்திய ஒப்பந்தமே பாக்தாத் ஒப்பந்தம் என்று அழைக்கப்படுகிறது.
2. அமெரிக்க ஐக்கிய நாடு இவ்வுடன்படிக்கையில் 1958 இல் இணைந்ததோடு, இவ்வொப்பந்தம் 'மத்திய உடன்படிக்கை அமைப்பு' என்று அறியப்பட்டது.

4) மார்ஷல் திட்டம் என்றால் என்ன?

**பதில் :** 1. மேற்கு ஐரோப்பிய நாடுகளைத் தன் செல்வாக்கினுள் வைத்துக் கொள்ள அமெரிக்க ஐக்கிய நாடு மார்ஷல் திட்டத்தை உருவாக்கியது.
2. இத்திட்டம் இரண்டாம் உலகப் போரின் பாதிப்புகளில் இருந்து மீண்டு வருவதற்காக அமெரிக்க டாலர்களைப் பயன்படுத்திக் கொள்ள வழிவகை செய்தது.

5) மூன்றாம் உலக நாடுகள் பற்றி ஒரு குறிப்பு வரைக.

**பதில் :** அமெரிக்க ஐக்கிய நாட்டின் தலைமையில் கூடிய முதலாளித்துவ நாடுகள் உலக அரங்கில் முதலாம் உலக நாடுகள் என்றும், சோவியத் நாட்டின் தலைமையில் கூடிய பொதுவுடைமை நாடுகள் இரண்டாம் உலக நாடுகள் என்றும் அழைக்கப்பட்டன. இவ்விரு பிரிவிலும் சேராமல் வெளியிலிருந்த நாடுகள் மூன்றாம் உலக நாடுகள் என்று அழைக்கப்பட்டன.

6) கியூபாவின் ஏவுகணைச் சிக்கல் எவ்வாறு செயலிழக்கச் செய்யப்பட்டது?

**பதில் :** 1. கியூபாவிலிருந்து வெளியேற்றப்பட்டிருந்த மக்களைக் கொண்ட ஒரு படை பிக்ஸ் வளைகுடாவில் ஏப்ரல் 1961ல் இறக்கியது. அதே வேளையில் காஸ்ட்ரோவின் ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கோடு அதன் விமான தளங்களை ஐக்கிய அமெரிக்க நாடுகள் குண்டு வீசித் தாக்கியது.
2. அமெரிக்காவின் போர்க் கப்பல்கள் கியூபாவைச் சுற்றிவளைத்தன. சோவியத்நாடு கியூபாவில் அணுசக்தியோடு இணைக்கப்பட்ட ஏவுகணைகளை ரகசியமாக நிறுவப்போவதாய் கென்னடி தலைமையிலான அமெரிக்க அரசிற்கு உளவுத்துறை தகவல் கொடுத்தது.

3. இறுதியாக சோவியத் நாட்டின் குடியரசுத்தலைவர் குருசேவ் ஏவுகணைகளைத் திரும்பப் பெற உறுதியளித்ததால் பிரச்சனைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

7) கோமிங்டாங்கும் 1928ஆம் ஆண்டு சீனாவில் எவ்வாறு நடுவண் அரசை ஏற்படுத்தினார்கள் என்பதை விளக்குக.

**பதில் :** (i) கோமிங்டாங்கின் தலைவராக ஷியாங் - கை - ஷேக் பொதுவுடைமைக் கட்சியின் தலைவர்களாக சூ - யென் - லாயும் மாசேதுங்கும் விளங்கினர்
(ii) பொதுவுடைமை வாதத்தின் தீவிர விமர்சகரான ஷியாங் தனது கட்சிக்குள்ளிருந்த பொதுவுடைமை வாதிகளை முக்கிய பொறுப்புக்களிலிருந்து விடுவித்தார்
(iii) பொதுவுடைமைவாதிகளின் செல்வாக்கோ பெருக்கப் பெற்று அவர்கள் தொழிலாளர்களையும் விவசாயிகளையும் தங்கள் இராணுவத்தில் பெருமளவில் சேர்க்கும் நிலை ஏற்பட்டது
(vi) ஷியாங் - கை - ஷேக் சீனாவை படையெடுக்க துவங்கினார். காண்டலில் ஆரம்பித்த அவர் 1925 இன் இறுதியில் ஹான்கோ வரை பிடித்திருந்தார்

8) மேற்கத்திய நாடுகளின் தேவையின் பொருட்டே இஸ்ரேல் உருவாக்கப்பட்டதென்பது சூயஸ் கால்வாய் பிரச்சனையில் உறுதியானது – விளக்குக.

**பதில் : சூயஸ் கால்வாய் சிக்கல்:**
(i) எகிப்தில் 1952 ஆம் ஆண்டு நிகழ்ந்த ஒரு கிளர்ச்சியின் மூலமாக கர்னல் நாசர் குடியசுத் தலைவராக ஆக்கப்பட்டார். அவர் 1956 ஆம் ஆண்டில் சூயஸ் கால்வாய் தேசியமாக்கினார்
(ii) இராஜதந்திரப் பிரயோகங்கள் பலனளிக்காத நிலையில் பிரிட்டனும் பிரான்சும் இணைந்து இராணுவ பலத்தைப் பயன்டுத்த முடிவு செய்தன.
(iii) இச்சூழலில் தனக்கு ஒரு வாய்ப்பு இருப்பதாக கருதிய இஸ்ரேல் தனது கப்பல் போக்குவரத்து வசதியாக அக்கபா வளைகுடாவை திறந்து விட்டதோடு அதன் மூலம் எகிப்தின் எல்லை மீறிய செயல்களுக்கு முற்றுப்புள்ளி வைத்தது

9) 'டாக்டர் சன்யாட் சென்' பற்றி சிறு குறிப்பு வரைக

**பதில் :** (i) டாக்டர் சன்யாட் சென் 1866 ஆம் ஆண்டு ஒரு ஏழ்மையான குடும்பத்தில் சான்டன் நகரத்தின் அருகே பிறந்தார்
(ii) இவர் 'சீனாவின் தந்தை' என அழைக்கப் பெற்றார் ஒரு கிறிஸ்தவ பள்ளிகளில் கல்வி பெற்றதோடு கிறிஸ்தவராக மாறினார். ஹாங்காங் நகரில் மருத்துவ பயிற்சி பெற்றார்
(iii) மஞ்சுக்களுக்கு எதிரான கிளர்ச்சியில் ஈடுபட்டு அவ்வெழுச்சி தோற்றத்தால் அவர் நாடு திறந்து வாழும் நிலை ஏற்பட்டது இவர் 1866 முதல் 1925 வரை வாழ்ந்தார்

10) பொதுவுடைமை கட்டுக்குள் வைக்க ட்ரூமெனின் வரையறை எழுதுக

**பதில் :** (i) கிழக்கு ஐரோப்பாவில் நாஜிக்கள் கட்டுப் பாட்டுக்குள் இருந்து சோவியத் நாட்டில் விடுவிக்கப்பட்ட நாடுகளில், அந்நாடு 1948 முதல் பொதுவுடைமை அரசுகளை ஏற்படுத்தியிருந்தது
(ii) ஐக்கிய நாட்டின் குடியரசு தலைவரான ட்ரூமென் பொதுவுடைமை கட்டுக்குள் வைக்க ஒரு வரைவை முன் மொழிந்தார்
(iii) சோவியத் நாடோ கிழக்கு ஐரோப்பா மட்டுமல்லாமல் உலகம் முழுக்க பொதுவுடைமை கருத்தை பரப்ப தீர்மானமாக இருந்தது

11) கியூபாவின் புரட்சிப் பற்றி எழுதுக

**பதில் :** (i) ஐக்கிய அமெரிக்க நாடு மத்திய அமெரிக்காவிலும் (ஹோண்டுரஸ், எல் சல்வதோ, நிகரகுவா, பணாமா, க்வாத்தமாலா), கரீபியப் பகுதியிலும் (கியூபா, டோமினியக் குடியரசு, ஹைதி) கிழக்கு ஆசியாவிலும் (பிலிப்பைன்ஸ், தென் கொரியா, தெற்கு வியட்நாம், தாய்லாந்து) தனக்கு துணைக் கோள்களாகச் சுற்றிச் செயல்படும் நாடுகளைக் கொண்டிருந்தது
(ii) இந்நாடுகள் ராணுவ அதிகாரிகளாலும் பெரும் நிலச்சுவான்தார்களாலும் சில சூழ்நிலைகளில் பெரு முதலாளிகளாலும் ஆட்சி செய்யப்பட்டு வந்தன
(iii) இது இந்நாடுகளை அமெரிக்க ஐக்கிய நாட்டின் பொருளாதார உதவியைச் சார்ந்திருக்கும்படி செய்தது. 5 வருடங்களுக்குப் பிறகு கியூபாவில் பிடல் காஸ்ட்ரோவும் சேகுவேராவும் சேர்ந்து ஊழல் ஆட்சியை முடிவுற்கு கொண்டு வந்தனர்

12) சோவியத் நாட்டின் பிளவு பற்றி குறிப்பு வரைக

**பதில் :** (i) உலக அரசியலில் 1970களிலும் 1980களில் முற்பகுதிகளிலும் சோவியத் நாடு மிகுந்த செல்வாக்கோடு திகழ்ந்தது.
(ii) எனினும் அதன் பொருளாதாரம் நலிவடையவும் முதலாம் உலக நாடுகளுக்கு ஈடு கொடுக்க முடியாமலும் தேங்கியது
(iii) 1980 களில் இறுதியில் சோவியத் நாடு இனவெறி கட்டவிழ்ப்பினாலும் பிராந்திய உணர்வின், புதிய தேசிய உணர்வின் பிறப்பிலும் கடும் நெருக்கடியைச் சந்தித்தது. அதனால் சோவியத் நாட்டின் பிளவு ஏற்படலாயிற்று

13) மேற்கத்திய நாடுகளின் தேவையின் பொருட்டே இஸ்ரேல் உருவாக்கப்பட்டதென்பது பிரச்சனையில் உறுதியானது - விளக்குக.

**பதில் :** 1. எகிப்தின் அதிபர் நாசர் 1956 ஆம் ஆண்டில் சூயஸ் கால்வாயை தேசியமயமாக்கினார். இது பிரிட்டிஷாரின் நல்லெண்ணெத்திற்கு விரோதமாகத் தெரிந்தது.
2. பிரிட்டனும் பிரான்சும் இணைந்து இராணுவ பலத்தைப் பயன்படுத்த முடிவு செய்தன.
3. இச்சூழலில் தனக்கு ஒரு வாய்ப்பு இருப்பதாகக் கருதிய இஸ்ரேல் தனது கப்பல் போக்குவரத்திற்கு வசதியாக அக்கபா வளைகுடாவை திறந்துவிட்டதோடு இஸ்ரேலியப் படைகள் எகிப்து மீது படையெடுத்தன.
4. இவ்வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள நினைத்த பிரிட்டன் தனது படைகளைக் கால்வாயைக் காப்பாற்றும் வகையில் நிறுத்தி வைக்க அனுமதி கோரியது.
6. இதற்கு எகிப்து மறுத்ததால் பிரிட்டனும் பிரான்சும் இணைந்து அந்நாட்டின் விமானத்தளங்கள் மீதும் இன்னபிற முக்கியத்தளங்கள் மீதும் சூயஸ் கால்வாய்ப் பகுதியிலும் குண்டு வீசின.
7. எனினும் உலக நாடுகளின் வற்புறுத்தலின் பேரில் நவம்பர் 6ஆம் தேதி பிரான்சும், பிரிட்டனும் தங்கள் எதிர்ப்பை நிறுத்திக் கொண்டன.

14) பாலஸ்தீனிய விடுதலை அமைப்பு பற்றி எழுதுக.

**பதில் :** 1. இஸ்ரேல் என்ற தேசம் 1948 இல் உருவாவதற்கு முன் பாலஸ்தீனில் வாழ்ந்த அரேபியர்களுக்கும் அவர்கள் வம்சாவளியினருக்குமாக உருவாக்கப்பட்ட ஒரு பரந்த அமைப்பு இதுவாகும்.
2. இரகசியமாகச் செயல்பட்டுவந்த எதிர்ப்பு இயக்கங்கள் தங்களை ஒருங்கிணைக்க 1964 இல் உருவாக்கப்பட்ட அமைப்பாகும்.
3. இவ்வமைப்பின் முக்கிய தலைவர் யாசர் அராபத் ஆவார்.

15) அணிசேரா இயக்கத்தின் அடிப்படைக் கொள்கைகள் யாவை?

**பதில் :** 1. அமைதியோடு இணைந்திருத்தல்
2. அமைதியையும் பாதுகாப்பையும் முன்னிறுத்தப் பாடுபடல்
3. எந்த அணியோடும் இராணுவக் கூட்டுறவு கொள்ளாமல் இருத்தல்.
4. எந்த வல்லரசுக்கும் தத்தம் நாட்டிற்குள் இராணுவ நிலைகள் ஏற்படுத்த அனுமதி வழங்காமல் இருத்தல்.

**<u>5 மதிப்பெண் வினாக்கள்</u>** 4 x 5 = 20

16) சீனாவை ஒரு பொதுவுடைமை நாடாக்க மா சே துங்கின் பங்களிப்பை அளவிடுக.

**பதில் : மா சே துங்:**

1. மா சே துங் தென்கிழக்கு சீனாவில் உள்ள ஹூனான் நகரில் பிறந்தார்.

2. ஹூனான் நகரை மையமாகக் கொண்டு தனது அரசியல் வாழ்க்கையைத் துவக்கிய அவர் ஒரு முழு பொதுவுடைமைவாதியாக மாறியிருந்தார்.

3. கோமிங்டாங்கின் தலைவராக ஷியாங் கை-ஷேக் இருந்தபோது பொதுவுடைமைக் கட்சியின் தலைவர்களாக சூ - யென் - லாயும், மா சே - துங்கும் இருந்தனர்.

**விவசாயிகளை வழிநடத்திய மாவோ:**

1. கோமிங்டாங்கின் கட்டுப்பாடு நகரங்களின் மீது கடுமையாக இருந்ததை மாவோ உணர்ந்தார். அதனால் அவர் விவசாயிகளை ஒன்றிணைக்க முயன்றார்.

2. கோமிங்டாங்கிற்கும் பொதுவுடைமை கட்சிக்கும் இடையே நிலவிய உறவு முறிந்ததும் மாவோவின் தலைமையில் சில நூறு விவசாயிகள் காடுகள் சூழ்ந்த மலைப்பகுதிகளில் ஏழு ஆண்டுகள் பதுங்கியிருந்தனர்.

3. கோமிங்டாங்கால் அக்காட்டு மலைப்பகுதியில் நுழைய முடியாத அதே வேளையில் மாவோவின் படை பெருகிக்கொண்டே சென்றது.

4. ஷியாங்கை சேக் பொதுவுடைமைவாதிகளைச் சுற்றி முற்றுகையிட்டார். எனவே மாவோ ஹூ ளான் பகுதியை விட்டு அகன்று ஒரு பாதுகாப்பான பகுதிக்கு செல்ல நினைத்தார்.

**நீண்ட பயணம்:**

1. 1933 ஆம் ஆண்டுவாக்கில் சீனப் பொதுவுடைமை கட்சியின் மீது முழுக்கட்டுப்பாடும் மாவோ வசம் வந்து சேர்ந்தது.

2. அவர் 1934 இல் 1,00,000 இராணுவத்தினருடன் ஒரு நீண்ட பயணத்தை முன்னெடுத்தார். அப்பயணம் ஒரு சகாப்தமாக மாறியது.

3. இப்பயணத்தில் பங்கு பெற்றோர் தொடர்ச்சியாக கடும் தொந்தரவிற்கும் அச்சுறுத்தலுக்கும் உட்பட்டனர்.

4. இறுதியில் 6,000 மைல்களைக் கடந்து 1935 இன் பிற்பகுதியில் ஷேனிப் பகுதியை சென்றடைந்தனர்.

5. மேற்கொண்டு அவர்களோடு மற்ற பொதுவுடைமைவாதப் படைகளும் சேர்ந்து கொண்டன.

6. 1937 ஆம் ஆண்டில் ஏறக்குறைய ஒரு கோடி மக்களின் தலைவராக மாவோ அங்கீகரிக்கப்பட்டார்.

7. கோமிங்டாங் அரசு விவசாயிகளை உள்ளடக்கிய போர் வீரர்களின் அதிருப்தியை சம்பாதித்த வேளையில் மாவோ நடுத்தர வர்க்கத்தின் ஆதரவைப் பெற கடுமையாக முயற்சித்தார்.

**மாவோவின் வெற்றி:**

1. மாவோ ஒருபுறம் கொரில்லாப் போர் முறையைக் கடைபிடித்துக் கொண்டே மறுபுறம் பெயரளவிலான இராணுவ நகர்வையும் ஏற்படுத்திக் கொண்டிருந்தார்.

2. ஷியாங் கே - ஷேக்கின் இராணுவம் வேகமாக உதிரத் துவங்கியது. சீனாவின் பெருவாரியான பகுதிகள் 1948 இல் பொதுவுடைமைவாதிகளின் கட்டுப்பாட்டுக்குள் வந்தது.

**சீன மக்கள் குடியரசு**

1. 1949 இல் மக்கள் அரசியல் கலந்தாய்வு மாநாடு பீகிங் நகரில் கூடியது. அம்மாநாடு நடுவண் ஆட்சிக்குழுவைத் தேர்ந்தெடுத்து அதற்கு மா சே - துங்கை தலைவராக நியமித்தது.

2. சீனாவில் மா சே - துங்கின் தலைமையில் சீன மக்கள் குடியரசு ஆட்சி நிறுவப்பட்டது.

17) ஐரோப்பியக்குழுமம் எவ்வாறு ஐரோப்பிய ஒன்றியமானது என்ற வரலாற்றை எடுத்தியம்புக.

**பதில் : ஐரோப்பிய குழுமம்:**

1. 1949 இல் பத்து நாடுகள் லண்டனில் கூடி ஐரோப்பிய சமூகத்தை உருவாக்க கையொப்பமிட்டன. இதன் தலைமையகம் ஸ்ட்ராஸ்பர்க் நகரில் அமைந்துள்ளது.

2. அதன்மூலம் ஐரோப்பியர்களுக்கிடையே மூண்ட போர்களைத் தவிர்க்கவும், ஒருங்கிணைந்த ஐரோப்பாவைக் கொண்டு சோவியத் நாட்டின் அச்சுறுத்தல்களை எதிர் கொள்ளவும், அமெரிக்க ஐக்கிய நாட்டின் படைகளுக்குச் சமமாக ஒரு படை பலத்தை நிறுவவும், கண்டங்களில் பொருளாதார மற்றும் இராணுவ வளங்களையும் திறன்களையும் முழுவதுமாகப் பயன்படுத்தவும் முடியும் என்று கருதப்பட்டது.

**ஐரோப்பிய நிலக்கரி மற்றும் எஃகு சமூகம்:**

1. ஐரோப்பிய நிலக்கரி மற்றும் எஃகு சமூகத்தைச் சேர்ந்த ஆறு நாடுகள் கூடி ரோம் ஒப்பந்தத்தை ஏற்படுத்தியது.

2. அதன் மூலம் ஐரோப்பியப் பொதுச்சந்தையை பிரெஸெல்ஸ் நகரைத் தலைமையகமாகக் கொண்டு ஏற்படுத்தின.

**ஐரோப்பிய பொருளாதார சமூகம் :**

1. இச்சமூகம் பண்டங்கள், சேவைகள், முதலீடு, தொழிலாளர் போன்றவற்றின் நகர்வை எல்லைகள் கொண்டு நிறுத்துவதை மாற்றியது.

2. சந்தைப் போட்டியைக் கட்டுக்குள் கொண்டுவர முயன்றபோது கொள்கைகளையும் தனியார் ஒப்பந்தங்களையும் புறக்கணித்தது.

3. பொதுவான விவசாயக் கொள்கையையும், பொதுவான வெளிநாட்டு வணிகத்தையும் இவ்வமைப்பு உருவாக்கியது.

**ஒற்றை ஐரோப்பியர் சட்டம்:**

1. ஒற்றை ஐரோப்பியச் சட்டம் 1987 இல் நடைமுறைக்கு வந்தது. அது ஐரோப்பிய பொருளாதார சமூகத்தின் எல்லைகளை விரிவாக்கி அதற்கு சட்ட வடிவம் கொடுத்தது.

2. மேலும் அது உறுப்பு நாடுகளை வெளியுறவுக் கொள்கையில் அதிகமான ஒத்துழைப்பை நாடியது.

**ஐரோப்பிய ஒன்றியம்:**

1. 1992ல் கையெழுத்திடப்பட்ட மாஸ்டிரிக்ட் (நெதர்லாந்து) ஒப்பந்தம் ஐரோப்பிய ஒன்றியத்தை ஏற்படுத்தியது.

2. பொதுவான நிதிக் கொள்கையும், பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட பணமும் (யூரோ) முதலில் நடைமுறைப்படுத்தப்பட்டு பின்னர் அவற்றை நிர்வகிக்கும் பொது நிறுவனங்களும் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன.

3. தற்போது ஐரோப்பிய ஒன்றியத்தில் 28 உறுப்பு நாடுகள் உள்ளன. அவை பிரெஸெல்ஸ் (பெல்ஜியத்தின்) நகரைத் தலைமையகமாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றன.

18) சீனப்புரட்சி பற்றி விரிவாக எழுது

**பதில் :** (i) மஞ்சு வம்சத்தின் சிதைவு 1908ம் ஆண்டு பேரரசின் பாதுகாவலாயிருந்த பேராசிரியர் தாவேகரின் மரணத்தோடுத் துவங்கியது. புதிய பேரரசர் இரண்டு வயதே நிரம்பியவர் என்ற நிலையில் மாகாண ஆளுநர்கள் சுதந்திரமாகச் செயல்படலாயினர். உள்ளூர் இராணுவக் கிளர்ச்சி 1911ம் ஆண்டு ஏற்பட்டு அதன் பாதிப்பு பல மட்டங்களில் பரவியது

(ii) மாகாண ஆளுநர்கள் மஞ்சு அரசின் பிரதிநிதித்துவங்களை உதறித் தங்கள் சுதந்திரத்தை பிடகடனப்படுத்தலாயின.

(iii) இக்காலக் கட்டத்தில் நடுத்தர வர்க்கத்திலிருந்து சில தலைவர்கள் உருவாகியிருந்தார்.

(iv) அவர்களில் டாக்டர் சன் யாட் சென்னும் ஒருவர் சீனாவில் ஏற்பட்ட எழுச்சியைப் பற்றி அமெரிக்க நாளிதழ்களின் மூலமாக அறிந்து கொண்ட டாக்டர் சன் யாட் சென் ஷாங்காய் நகரை வந்தடையவும் அங்கே அவர் சீனக் குடியரசின் தற்காலிக குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

(v) ஆனால் மஞ்சு அரசின் நிர்வாகத்தில் முன்பு அமைச்சராகப் பணியாற்றிய யுவான்-ஷி-கே வடபகுதி நவீன இராணுவத்தின் முழுக் கட்டுப்பாட்டையும் தன்னிடம் வைத்திருந்தார்.

(vi) அவர், சிறு வயது பேரரசர் பதிவுயேறக் காரணமாக இருந்தவர்களை வலியுறுத்தி பேரரசரைப் பதவியை விட்ட விலகச் செய்யும் முயற்சியில் வெற்றிகண்டார். அங்கு ஒரு குடியரசும் ஏற்படுத்தப்பட்டது.

19) அணிசேரா இயக்கம் பற்றி விவரி.

**பதில் : பாண்டுங் மாநாடு :**

1. இரண்டாம் உலகப்போருக்குப் பின் ஏற்பட்ட காலனியாதிக்க வெளியேற்றத்தின் பின்னணியில் அணிசேரா இயக்கம் உருப்பெற்றது.

2. புதிதாக அரசியல் சுதந்திரம் பெற்ற ஆசிய, ஆப்பிரிக்க, நாடுகள் 1955 இல் பாண்டுங்கில் (இந்தோனேசியா) கூடி இரு வல்லரசுகளின் அணிகளிலும் சேரக்கூடாது என்பதை தீவிரமாக வலியுறுத்தின.

3. மேலும் அவை காலனிய ஆதிக்கமும் ஏகாதிபத்தியமும் எவ்வடிவம் எடுத்தாலும் அதை எதிர்த்து நிற்பது என்று முடிவு செய்தன.

**பெல்கிரேட் மாநாடு :**

1. அணிசேரா இயக்கம் 1961 இல் டிட்டோ (யுகோஸ்லோவியா), நாசர் (எகிப்து), நேரு (இந்தியா), நுக்ருமா (கானா), சுகர்னோ (இந்தோனேசியா) ஆகிய தலைவர்களை முன்னிறுத்தி பெல்கிரேடில் ஒரு மாநாட்டைக் கூட்டியது.

**அடிப்படைக் கொள்கைகள்:**

1. அமைதியோடு இணைந்திருத்தல், அமைதியையும், பாதுகாப்பையும் முன்னிறுத்தப் பாடுபடுதல்

2. எந்த அணியோடும் இராணுவக் கூட்டுறவு கொள்ளாமல் இருத்தல்.

3. எந்த வல்லரசுக்கும் தத்தம் நாட்டிற்குள் இராணுவ நிலைகள் ஏற்படுத்த அனுமதி வழங்காமல் இருத்தல் போன்றவை ஆகும்.

4. சோவியத் வீழ்ச்சிக்குப் பிறகு அணிசேரா இயக்கத்தின் தேவை மங்கியது.